Registered as a News Paper | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | மார்கழி 18 | (02-01-1992) | வியாழக்கிழமை | ஓசை: 318

## தமிழீழ காவல்நிலையம் மூன்று திறக்கப்பட்டன

சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி ஆகியஇடங்களில் தமிழீழகாவல்துறையினரதுகாவல்பணிமனைகள் நேற்றுசப்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டன. காலை 7 - 30 மணியளவில் சங்கானை காவல் நிலையத்தை யாழ். மாவட்ட தளபதி திரு. செந்தாளன் திறந்து வைத்தார். தேசியக் கொடியை திரு. செந்தாளனும் காவல் துறைக் கொடியை காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனும் ஏற்றி வைத்தனர். யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கபிலம்மான் ஆகியோர் (3ஆம்பக்கம் பார்க்க)

# தொண்டாவின் யாழ். விஜயம் ரத்து?

# சிங்கள இனவாதத்தின் எதிரொலி

## வருகையை மீள்பரிசிலனை செய்வதாக தினகரன் பத்திரிகைக்கு பேட்டி

(கொழும்பு)

தைப்பொங்கலுடன் யாழ்ப்பாணம் மேற்கொள்ளவிருந்த தமது விஜயத்தை மீள்பரிசீலனை செய்வதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்ததாக தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் தாம் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதில் பயனில்லை என்றும் திரு. தொண்டமான் தினகரனுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

எனது சமாதான யோசனைகள் சம்பந்தமாக இப்போதைய கலந்துரையாடல்கள் ஊக்கம் தருகின்றவையாக இருப்பினும், சிங்கள மக்களின் பூரண ஒத்துழைப்பு இல்லாமல் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தும் தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த இயலாது எனவும் திரு. தொண்டமான் பேட்டியில் தெரிவித்தார்.

மிகவும் கஷ்டமான நிலையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு மீட்சி அளிப்பதற்கு நான் முயலவில்லை என்றும் (3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மீது படையெடுப்பு: இம்மாதம் இடம்பெறுமாம்

### இராணுவ தயாரிப்பு நடைபெறுவதாக ‘ஐலண்ட்’ பத்திரிகை கூறுகிறது

சிறிலங்கா இராணுவம் தனது நிலையை யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பலப்படுத்தி வருகிறது. இராணுவ முகாம்களுக்கும், படைப்பிரிவுகளுக்கும் மேலதிகமாகச் சிப்பாய்கள் இணைக்கப்படுவதோடு, ஆயுதங்களும்வழங்கப்படுகின்றன. சண்டை இந்த மாத நடுப்பகுதியில் அல்லது மாதஇறுதியில் இடம்பெறலாமென்று அவதானிகள் கருதுகின்றனர். பெரும்பாலும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சண்டை இடம் பெறலாம்.

இவ்வாறு ‘ஐலண்ட்’ பத்திரிகை தெரிவிக்கின்றது.

கடல் மார்க்கமாக நகர்த்தப்படும் படை யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்தலாம் என்று புலிகள் நம்புகிறார்கள் புலிகளும் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு (3 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் தீர்வுத்திட்டம் பிரேமதாசா உடையது - லலித்

(கொழும்பு)

தொண்டமானின் தீர்வுத் திட்டம் உண்மையில் ஜனாதிபதி பிரேமதாசாவின் திட்டமே. நாம் அதனை அரசு-தொண்டமான் தீர்வுத் திட்டம் என்றும் கூறலாம். ஜனாதிபதியிடம் அனுமதி பெறாமல் தொண்டமான் எவ்வாறு புலிகளுடன் பேசுவதற்கு முன் வரமுடியும்? ஜனாதிபதி எம்மை இது தொண்டமானின் தீர்வுத் திட்டம் தான் என நம்பவேண்டுமென நினைப்பாரேயானால் அது எமது மக்களின் மதிநுட்பத்திற்கு அவமானமாகும் என்று முன்னை நாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

குருவித என்ற இடத்தில் இடம்பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார். ஐக்கிய தேசிய

## சிங்கள மக்கள்

## மறவன்புலவில் கெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கேரதீவுமறவன்புலவுப்பகுதியில் நேற்று சிறிலங்கா கெலிக்கொப்ரர்கள் வட்டமிட்டு கலிபர் வேட்டுக்களை தீர்த்தன.

மாலை நான்கு முப்பது மணியளவில் அங்கு வந்த இரண்டு கெலிக்கொப்டர்கள் இந்தத்தாக்குதலை நடாத்தின கீழே இருந்து விடுதலைப்புலிகளும் பதிலுக்கு தாக்கினர்.

## வவுனியா கிராமங்கள் மீது விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா விமானப் படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின வவுனியா மாவட்டத்தின் கட்டியகுளம் பகுதியிலுள்ள குடியிருப்புக்கள் மீது அவ்ரோ விமானமொன்றும், மூன்று சியா மார்செற்றி விமானங்களும் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலினால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்து உள்ளன.

இதேவேளை வவுனியா இராணு தடை முகாமின் காவல் அரணில் இருந்து இரா ( 4ஆம் ப்க்கம் பார்க்க)

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக பாத யாத்திரை

## வருகையை மீள்பரிசீலனை செய்வதாக தினகரன் பத்திரிகைக்கு பேட்டி

(கொழும்பு)

தைப்பொங்கலுடன் யாழ்ப்பாணம் மேற்கொள்ளவிருந்த தமது விஜயத்தை மீள்பரிசீலனை செய்வதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்ததாக தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் தாம் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதில் பயனில்லை என்றும் திரு. தொண்டமான் தினகரனுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

எனது சமாதான யோசனைகள் சம்பந்தமாக இப்போதைய கலந்துரையாடல்கள் ஊக்கம் தருகின்றவையாக இருப்பினும், சிங்கள மக்களின் பூரண ஒத்துழைப்பு இல்லாமல் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தும் தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த இயலாது எனவும் திரு. தொண்டமான் பேட்டியில் தெரிவித்தார்.

மிகவும் கஷ்டமான நிலையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கு மீட்சி அளிப்பதற்கு நான் முயலவில்லை என்றும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவின் தீர்வுத்திட்டம் பிரேமதாசா உடையது

- லலித்

(கொழும்பு)

தொண்டமானின் தீர்வுத் திட்டம் உண்மையில் ஜனாதிபதி பிரேமதாசாவின் திட்டமே. நாம் அதனை அரசு-தொண்டமான் தீர்வுத் திட்டம் என்றும் கூறலாம். ஜனாதிபதியிடம் அனுமதி பெறாமல் தொண்டமான் எவ்வாறு புலிகளுடன் பேசுவதற்கு முன்வரமுடியும்? ஜனாதிபதி எம்மை இது தொண்டமானின் தீர்வுத் திட்டம் தான் என நம்பவேண்டுமென நினைப்பாரேயானால் அது எமது மக்களின் மதிநுட்பத்திற்கு அவமானமாகும் என்று முன்னைநாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

குருவித என்ற இடத்தில் இடம்பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார். ஐக்கிய தேசிய முன்னணி என்ற தனது புதிய கட்சியின் கொள்கை குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர், ஜனாதிபதியின் உடன்பாடு இல்லாமல் எந்த ஒரு முட்டாளும் இப்படியான ஒரு தீர்வுத் திட்டத்தை புலிகளுடன் பேசப் போவதில்லை என்றார்.

## சிங்கள மக்கள் துர்பாக்கியசாலிகள்

### மத்திய மாகாண சபைத் தலைவர் கவலை

(கொழும்பு)

பெருந் தோட்டங்களுக்கு அருகாண்மையில்உள்ள கிராமங்களில் வாழும்சிங்கள மக்கள் துர்பாக்கியசாலிகள். அந்தச் சிங்கள மக்களுக்கு தோட்டப் பகுதி நிலங்களிலிருந்து ஒரு அங்குல நிலத்தை தானும் எம்மால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை இவ்வாறு மத்திய மாகாணசபைத் தலைவர் சமரதுங்க கவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் கண்டியில் இலங்கை ஐக்கிய கிராமசேவையாளர் சங்கத்தின் கண்டிக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுபேசிய அவர் தமது உரையில் மேலும் சகல அரசியல் வாதிகளுமே தோட்டத்தொழிலாளர்களின் உரிமையைப்பற்றி மாத்திரமே

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கியத்திற்கு எதிராய் அரசு செயற்படாது

-பிரேமதாசா

(கண்டி)

நாட்டின் ஐச்கியத்திற்கும், இறைமைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தத் திட்டத்தையும் அரசாங்கம் செயற்படுத்த மாட்டாது என்று பிரேமதாசா நேற்று கண்டியில் தெரிவித்தார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற மூன்றாண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக கண்டிக்குச் சென்ற திரு. பிரேமதாசா பெளத்த மத உயர் பீடத்தினரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; இருபதாண்டுகளாக நீடிக்கும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண பாராளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரைதீர்க்கப்படாதிருக்கும் வடக்குக் கிழக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவை விமர்சித்து துண்டுப் பிரசுரம்

### —பல்கலை மாணவர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதியின் மூன்றாண்டு கால ஆட்சியை பல விதமாக விமர்சித்து வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தபல்கலைக் கழக மாணவர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த மற்றுமிருவர்

( 3ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மீது படையெடுப்பு: இம்மாதம் இடம்பெறுமாம்

## இராணுவ தயாரிப்பு நடைபெறுவதாக 'ஐலண்ட்' பத்திரிகை கூறுகிறது

சிறிலங்கா இராணுவம் தனது நிலையை யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் பலப்படுத்தி வருகிறது. இராணுவ முகாம்களுக்கும், படைப்பிரிவுகளுக்கும் மேலதிகமாகச் சிப்பாய்கள் இணைக்கப்படுவதோடு, ஆயுதங்களும்வழங்கப்படுகின்றன. சண்டை இந்த மாத நடுப்பகுதியில் அல்லது மாதஇறுதியில் இடம்பெறலாமென்று அவதானிகள் கருதுகின்றனர். பெரும்பாலும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சண்டை இடம் பெறலாம்.

இவ்வாறு 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவிக்கின்றது.

கடல் மார்க்கமாக நகர்த்தப்படும் படை யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்தலாம் என்று புலிகள் நம்புகிறார்கள் புலிகளும் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மறவன்புலவில் கெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கேரதீவுமறவன்புலவுப்பகுதியில் நேற்று சிறிலங்கா கெலிக்கொப்ரர்கள் வட்டமிட்டு கலிபர் வேட்டுக்களை தீர்த்தன.

மாலை நான்கு முப்பது மணியளவில் அங்கு வந்த இரண்டு கெலிக்கொப்டர்கள் இந்தத்தாக்குதலை நடாத்தின கீழே இருந்து விடுதலைப்புலிகளும் பதிலுக்கு தாக்கினர்.

மீண்டும் வெள்ளி மஞ்சரி

ஈழநாதம் வெள்ளி மஞ்சரி நாளை மீண்டும் வெளிவர இருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

விலை ரூபா 6/- மட்டுமே

## வவுனியா கிராமங்கள் மீது விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா விமானப் படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின வவுனியா மாவட்டத்தின் கட்டியகுளம் பகுதியிலுள்ள குடியிருப்புக்கள் மீது அவ்ரோ விமானமொன்றும், மூன்று சியா மார்செற்றி விமானங்களும் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலினால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்து உள்ளன.

இதேவேளை வவுனியா இராணு தடை முகாமின் காவல் அரணில் இருந்து இரா

( 4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக பாத யாத்திரை

(கொழும்பு)

பிரேமதாச அரசை எதிர்க்க சுதந்திரக் கட்சியும், மற்றும் எதிர்க்கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து பாதயாத்திரை நடாத்த உள்ளனர்.

இந்த பாதயாத்திரை சம்பந்தமாகதிகதியைத் தீர்மானிப்பதற்கு சுதந்திரக் கட்சித் தலைமைஅலுவலகத்தில்எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கடற்படை சூடு; இந்திய மீனவர் பலி

(சென்னை)

கச்சதீவுக்கருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் மீனவர் ஒருவர் உயிரிழந்ததுடன் படகும் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இப் படகில் இருந்த மேலும் இருவர் கடலில் பாய்ந்து நீந்தி இராமேஸ்வரக் கரையை அடைந்துள்ளனர்.

### சென்னை நீதிமன்றத்தில்

# புலிகளையும், கப்பலையும் விடுவிக்க மனு தாக்கல்

(சென்னை)

காரைக்கால் கடற்பகுதிக்கு அப்பால் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் தம்மையும் கப்பலையும் விடுதலை செய்யும் படி கோரி சென்னை விசேட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் தமது மனுவில் தாம் கப்பல் ஒன்றில் உணவு, துணிவகை, மருந்துவகை ஆகியவற்றுடன் வரும் பொழுது சென்னைக்கு தென் கிழக்காக 353 கடல் மைல்களுக்கப்பால் இந்திய கடல் எல்லைக்கு வெளியே வைத்து இந்திய கடற்படையால் கைது செய்யப்பட்டோம் என்றும், எமக்கு இந்தியக் கடல் எல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

(ஆண்டு 11)

## சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்:

**05 - 01 - 92**

✽ 3-1-92 இற்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்யவும்

**யூனிவேர்சல்**

**கந்தர்மடம் — யாழ்ப்பாணம்**

(சி 3722)

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**லியோ கழகம்**

## பரிசுச் சீட்டிழுப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டிருந்த மேற்படி சீட்டிழுப்பு எதிர்வரும் பொங்கல் தினத்தன்று 15-01-1992 புதன் கிழமை மாலை 4-00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் அதிட்டம் பார்க்கப் படும்.

தங்கள் ஆதரவுக்கு நன்றி

அதிபர்

(சி-3724)

---

## முக்கிய அறிவித்தல்

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபன ஒட்டிசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் கடமை புரியும் சகல ஊழியர்களுக்கும் 06.01.1992 காலை 9.00 மணிக்கு ஊழியர்களின் கொடுப்பனவு சம்பந்தமான தீர்மானம் எடுக்கவேண்டியிருப்பதால்தொழிற்சாலைக்கு சமுகம் கொடுக்கும்படி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

முகாமையாளர்.

ஓட்டுத்தொழிற்சாலை,
ஒட்டிசுட்டான்.

(சி/3728)

---

## கேள்விப்பத்திரம் கோரல்

**இலங்கை மின்சாரசபை - வடமாகாணம்**

வடமாகாணத்திலுள்ள உப மின்நிலையங்களிலிருந்து மின்மாற்றிகளை கீழ்க்காட்டப்படும் இடங்களுக்குக்

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**வீதிவேலைப் பொருள்களுக்கான**

## கூறுவிலை அறிவித்தல்

**1992**

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு வீதிவேலைப் பொருள்களுக்கான

1. கண்டகல்
2. கிறசர் சல்லிகள், கையால் உடைத்த சல்லி
3. மண் வகைகள், ஊரி, கிறசர் தூள், மக்கி,
4. தேங்காய்மட்டை (பொச்சு) பனை மட்டை கிடுகு, சுண்ணாம்பு (நீற்று சிப்பி)

ஆகியவற்றுக்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கூறுவிலை யாழ். மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 10 01 1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ரூபா 500 - மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும் ரூபா 50/- கேள்விப்படிவக் கட்டணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் (இணைப் பிரதிகளில்) சமர்ப்பித்தல் வேண்டும். கிடுகு, தேங்காய் மட்டை, சுண்ணாம்பு போன்ற பொருள்களுக்கு பிணைப்பணம் செலுத்தத்தேவையில்லை. ஒவ்வொரு பொருள் விநியோகத்திற்கும் தனித்தனியாக படிவங்களில் கூறுவிலை குறிக்கப்பட்டு 13 01 1992 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்,

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு ''மராமத்துப்பகுதி வீதிவேலை பொருள்களுக்கான கூறுவிலை - 1992'' எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். மாநகர அலுவலக மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-12-1991

(சி 3729)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



---

## தமிழர் நலன் காக்கும் ஒன்றியம்

தமிழர் நலன் காக்கும் ஒன்றியத்தின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன. விபரம்:-

| உ. அ. அ. பிரிவு | காலம் | இடம் |
|---|---|---|
| உடுவில் | 04-01-1992 சனிக்கிழமை காலை 10.00 மணி | சுன்னாகம் ப.நோ.கூ.சங்க மண்டபம் |
| சங்கானை | 05-01-1992 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி | வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி |

இக்கலந்துரையாடல்களில் பொது ஸ்தாபனங்கள், பொதுமக்கள் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

01-01-1992 (2062) -இணைப்பாளர்

---

அரசாங்க

## கேள்வி அறிவித்தல்

**1992 ஆம் ஆண்டுக்கான சலவை ஒப்பந்தம்**

**மா. வை. கிளிநொச்சி**

மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி சலவை ஒப்பந்தத்திற்கான கேள்வித் திகதி 10.01.92 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விக்காரர்கள் மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சியில் இதற்குரிய படிவங்களை எடுத்து இவ்வைத்தியசாலையிலேயே கேள்வி விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். விண்ணப்பத்திற்கான கேள்வி வைப்புப்பணம் 75 ரூபாவாகும். விண்ணப்பப்படிவம் 09.01.92 மு.ப 12.00 மணி வரை கொடுக்கப்படும் எனவும் 10.01.92 காலை 10.00 மணிக்கு கேள்விகள் திறந்து வாசிக்கப்படும் எனவும் அறியத்தருகிறேன்.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி 3719)

---

## நினைவு கூருகின்றோம்

**1992 - 01 - 02**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கொத்தியாம் பத்தையில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ஈசன்** (வைத்திலிங்கம் விக்னேஸ்வரன் [illegible],
முள்ளியவளை)

மட்டக்களப்பு, தாண்டவன் வெளியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்

1988 ஆம் ஆண்டு சாகாமத்தில் இந்தியப்படை சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். சந்துரு** (பொன்னம்பலம்
பகீரதன் - அக்கரைப்பற்று - 08)

1989 ஆம் ஆண்டு முட்டுச்சேனையில் ஆற்றில் மூழ்கியதனால் எம்மைப்பிரிந்த

**லெப். பாலு** (ஏகாம்பரம் ஞானசேகரம் -

## சீட்டிழுப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டிருந்த மேற்படி சீட்டிழுப்பு எதிர்வரும் பொங்கல் தினத்தன்று 15-01-1992 புதன் கிழமை மாலை 4-00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் அதிட்டம் பார்க்கப் படும்.

தங்கள் ஆதரவுக்கு நன்றி

அதிபர்

(சி-3724)

## முக்கிய அறிவித்தல்

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபன ஒட்டிசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் கடமை புரியும் சகல ஊழியர்களுக்கும் 06.01.1992 காலை 9.00 மணிக்கு ஊழியர்களின் கொடுப்பனவு சம்பந்தமான தீர்மானம் எடுக்கவேண்டியிருப்பதால்தொழிற்சாலைக்கு சமுகம் கொடுக்கும்படி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

முகாமையாளர்.

ஓட்டுத்தொழிற்சாலை,
ஒட்டிசுட்டான்.

(சி/3728)

## கேள்விப்பத்திரம் கோரல்

### இலங்கை மின்சாரசபை - வடமாகாணம்

வடமாகாணத்திலுள்ள உப மின்நிலையங்களிலிருந்து மின்மாற்றிகளை கீழ்க்காட்டப்படும் இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு லொறி ராக்டர் உரிமையாளர்களிடமிருந்து காப்பு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

(1) யாழ் மாவட்டத்திலுள்ள உபமின் நிலையங்களிலிருந்து - சுன்னாகம் இலங்கை மின்சார சபை வளவிற்கு.

(2) கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள உபமின்நிலையங்களிலிருந்து - கிளிநொச்சி கிறிட் உப மின்நிலையத்திற்கு.

கேள்விப்பத்திரப் படிவமும் மேலதிக விளம்பரங்களும் எனது அலுவலகத்திலும் கிளிநொச்சி மின் பொறியியலாளர் அலுவலகத்திலும் 1992.01.01 ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து 1992.01.07 ஆம் திகதி மாலை 3.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம் 536 1 காங்கேசன்துறை வீதியிலுள்ள வடபிரதேச பிரதி முகாமையாளர் அலுவலகத்தில் 1992.01.10 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பபடல் வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதி அன்று காலை 10.00 மணிக்குக் கேள்விகள் முடிவுற்றவுடன் அவை யாவும் திறந்து பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

**வே. கந்தசாமி**
பிரதிப் பொது முகாமையாளர்
வடபிரதேசம்.

536 1, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3711)

நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்,

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு ''மராமத்துப்பகுதி வீதிவேலை பொருள்களுக்கான கூறுவிலை - 1992'' எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். மாநகர அலுவலக மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-12-1991

(சி 3729)

## 1-ம்ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செங்கமலம் இந்திரன்

அவர்கள்

(வீரவேங்கை மேஜர்சலாம் அவர்களின் சகோதரி)

தோற்றம் 1941-04-03 — மறைவு 1991-01-02

கண்ணியம் நிறைந்த மனைவியாய், பாசமிகு தாயாய்,
பெற்றோர்களின் பெருமகளாய், உடன்பிறப்புக்களின்
இனிய சகோதரியாய்,
அன்பு மைத்துனியாய், உற்றாரை உபசரித்த
உத்தமியாய்,
மண்மீட்கப்போராடும் தம்பியரை வரவேற்று
உரமூட்டும் சகோதரியாய்,
வாழ்ந்த வாழ்வுதனை நினைக்க நினைக்க
நெஞ்சமெல்லாம் வேகுகின்றதே.

\- குடும்பத்தினர்

தமிழ்வளர் சோலை,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(2056)

... 10.01.92 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விக்காரர்கள் மாவட்ட வைத்திய சாலை கிளிநொச்சியில் இதற்குரிய படிவங்களை எடுத்து இவ்வைத்தியசாலையிலேயே கேள்வி விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். விண்ணப்பத்திற்கான கேள்வி வைப்புப்பணம் 75 ரூபாவாகும். விண்ணப்பப்படிவம் 09.01.92 மு.ப 12.00 மணி வரை கொடுக்கப்படும் எனவும் 10.01.92 காலை 10.00 மணிக்கு கேள்விகள் திறந்து வாசிக்கப்படும் எனவும் அறியத்தருகிறேன்.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி 3719)

## நினைவு கூருகின்றோம்

## 1992 - 01 - 02

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கொத்தியாம் பத்தையில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ஈசன்** (வைத்திலிங்கம் விக்னேஸ்வரன் மாமூலை, முள்ளியவளை)

மட்டக்களப்பு, தாண்டவன் வெளியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்

1988 ஆம் ஆண்டு சாகாமத்தில் இந்தியப்படை சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். சந்துரு** (பொன்னம்பலம் பகீரதன் - அக்கரைப்பற்று - 08)

1989 ஆம் ஆண்டு முட்டுச்சேனையில் ஆற்றில் மூழ்கியதனால் எம்மைப்பிரிந்த

**லெப். பாலு** (ஏகாம்பரம் ஞானசேகரம் - கூனித்தீவு, திருக்கோணமலை)

புளொட்டினால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட

❋ **குணம்** (சேதுபதி குணரத்தினம் - வீரமுனை சம்மாந்துறை)

யாழ்ப்பாணப் பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ் வால் வெட்டிக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

சுன்னாகத்தில் ஈ. பி. ஆர். எல். எவ்வால் சுட்டுக் கொல்லப்பட்ட மானிப்பாயைச்சேர்ந்த இளைஞன்

ஒட்டிசுட்டானில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்

1990 ஆம் ஆண்டு முசல்குத்தியில் புளொட் முகாம் மீதான தாக்குதலில் காயமுற்று வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப்: அலெக்ஸ்** (இராமலிங்கம் ரமேஸ் - இராசேந்திரன்குளம், வவுனியா)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் குணம் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

— **விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**

(சி/3717)

## சிந்தனைக்கு

எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காவிடில், எதிர்காலம் என்று ஒன்று இருக்காது.

- ஜான் கேல்ஸ் வெந்தி


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 02-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05


## நாசிகளுக்குஇவர்கள் குறைவானவர்கலல்ல

இஸ்ரேலிய சியோனிஸ்டுகளின் இன வெறி, ஜேர்மன் நாசிகளின் இன வெறி என்பனவற்றிற்கு எந்தளவும் குறைந்ததல்ல பௌத்த சிங்களவரின் பேரினவாதம்.

உலகிற்கு கருணையையும், அஹிம்சையையும் சாந்தியையும், சமாதானத்தையும் போதித்த புத்த பிரானின் போதனைகளைப் பின்பற்றும் பௌத்த சங்கங்களும், பீடாதிபதிகளும் போரைப்பற்றியும் ஆக்கிரமிப்புப் பற்றியும் பேசுகின்றார்கள். மக்களுக்கு யுத்தவெறி ஊட்டுகிறார்கள்.

இலங்கை ஒரே நாடு. இங்குள்ள மக்கள் அனைவரும் சமமானவர்கள். அவர்களுக்குரிய உரிமைகளும் சமமானது எனத் தெரிவிக்கும் சிறிலங்கா அரசாங்கம் ஒரு பகுதி மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு அடக்குமுறை, ஆக்கிரமிப்பு என்பனவற்றில் அக்கறை செலுத்துகின்றது.

பத்திரிகைகளின் வழி முறையும் அவ்வாறேயுள்ளது. அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் நல்வழி காட்டக் கூடியவையாகவும், நாட்டின் அபிவிருத்திக்கு வழிகாட்ட வேண்டியவையுமான பத்திரிகைகள் போருக்கும், அழிவிற்கும் தூண்டுகோலாக உள்ளன. இனவாதப் போதனை என் தேஅவற்றின் இலட்சியங்களாக உள்ளன.

பேரினவாத சிந்தனையோடு இயங்கும், மதம், அரசாங்கம், அரசியல்வாதிகள், பத்திரிகைகள் என்பன மட்டுமல்ல பெரும் நிதிவளங்களைக் கையாளும் சிங்களவரின் கட்டுப்பாட்டிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் இனவாத நோக்கிலேயே செயற்படுகின்றன. மனித நேயம், சமத்துவம் என்ற அடிப்படையான தமது இலட்சியங்கள் இனவாதத்தின் முன்னர் தோற்றுப் போய் விட்டன.

வடக்கு-கிழக்குப் பகுதித் தமிழர்களின் புனர்வாழ்விற்கென வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட 180 மில். ரூபாவைப் பயன்படுத்தி இந்தப் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்ற சர்வோதய நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. சர்வோதயத்தின் இந்நடவடிக்கை அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல. சிங்களவரின் ஆதிக்கத்தினுள் ஏனைய நிறுவனங்களின் நிலையும் இதுவே.

அதாவது இனவாதத்திற்கும், போருக்கும்நெருக்கடிகளுக்கும் வித்திடுபவையாகவே சிறிலங்காவிலுள்ள சகலஅரசு, அரசசார்பற்ற அலகுகளும் மாற்றம் அடைந்துள்ளன. ஆக்கிரமிப்பும் அடக்குமுறையுமே அவர்களது இலட்சியமாகி விட்டது. இந்த நிலையில், சிங்களப் பேரினவாதத்திடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பியோ, விரும்பாமலோ போராடித்தான் ஆகவேண்டும். இல்லையேல் தமிழரையும்அவர்களுக்கு என்று எதையும் பௌத்த சிங்களப் பேரினவாதம்மிச்சம் வைக்காது.

# இந்திய - ரஷ்ய உறவில் மாற்றம் எதுவுமில்லை

- சரத்பவார்

(மொஸ்கோ)

சோவியத்யூனியனுடன் இந்தியா செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தங்களில் எந்தவித மாற்றமும் இருக்காது என்றும் புதிய பொது நல அமைப்பிலுள்ள குடியரசுகளுடன் இந்தியா பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருக்கும் என்றும் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத்பவார்தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சரத்பவார் முன்னாள் சோவியத்தின் உடன்படிக்கைகள் குறித்துக்கேட்ட போது இதனைத் தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டு இந்தியாவும் சோவியத்தும் செய்து கொண்ட இருபது வருடகால பாதுகாப்பு உடன்படிக்கை இந்த ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது தெரிந்ததே. இந்த உடன்படிக்கையிலேயே எந்தவித மாற்றங்களும் இருக்காது என சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவும், பிரித்தானியாவும் கொண்டுள்ள போக்கில் ஒரு மாற்றம் தெரிகின்றது என்றும் சரத்பவார் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். புனர்வாழ்விற்கு நிதி வழங்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகப் புனர்வாழ்வுப் பகுதிக்கு மேலதிக நிதி வழங்க புனர்வாழ்வு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் ஏனைய நிவாரண வேலைகளை மேற்கொள்வதற்கும் கணிசமான அளவு நிதி தேவைப்படுகின்றது. இந்த நிதி ஒதுக்கீடு செய்யும்படி கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கைவிடுத்தபோதிலும் நிதி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது

அதேவேளை யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் நிவாரணம் கோரும் விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத்தில் தேங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 26 பாடசாலைகளில் சுருக்கெழுத்துப் பாடநெறி

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 26 பாடசாலைகளில் 1992 இல் ஆண்டு ஒன்பதில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக யாழ் கல்வித் திணைக்கள வர்த்தக பாட ஆலோசகர் அனைத்துக் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

யாழ் கல்விக் கோட்டத்தில் 4 பாடசாலைகளிலும், வேலணைக் கோட்டத்தில் 3 பாடசாலைகளிலும் பண்டத்தரிப்புக் கோட்டத்தில் 4 பாடசாலைகளிலும், மருதனார் மடக் கோட்டத்தில் 6 பாடசாலைகளிலும் சாவகச்சேரிக் கோட்டத்தில் 4 பாடசாலைகளிலும் பருத்தித்துறைக் கோட்டத்தில் 5 பாடசாலைகளிலும் இந்த கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

## ஒரு ரூபாய் சிறப்பு நாணயம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஜனாதிபதிபதவி ஏற்று மூன்று வருடத்தை நினைவு கூருமுகமாக இன்று வியாழக்கிழமை ஒரு ரூபாய் சிறப்புநாணயக் குற்றிஒன்றை இலங்கை மத்திய வங்கி வெளியிடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள

பேசுகிறார்கள். மலைநாட்டில் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட சிங்கள கிராமவாசிகளைப்பற்றி பேசுவதேயில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும், அமைச்சர் தொண்டமானுக்கு புலிகள் விடுத்திருக்கும் அழைப்புக்கும், வடக்குக்கு செல்ல அவர் தயாராக இருப்பதற்கும் பின்னணியில் ஒரு பொறி உள்ளது. புலிகள் தொண்டமானைப் பணயக் கைதியாக பிடித்து வைத்துக் கொண்டு அவரை விடுவிக்க வேண்டுமானால் வடக்கிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறுமாறு கோரக்கூடும். அதே வேளை தோட்டத் தொழிலாளர்களும்தொண்டமானை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தக்கூடும்? இந்தப் பொறியில் அரசாங்கம் விழத்தான் வேண்டுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

பிரேமாவை

தப்பியோடிவிட்டனர் எனவும் பொலிசார் கூறியுள்ளனர். கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு வெளியே நேற்று இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தொண்டாவின்

யுத்தத்தை நிறுத்துமாறு நான் அரசாங்கத்தைக் கேட்கவில்லை என்றும்அரசியல்தீர்வு ஒன்றைக் காணவே நான் முயலுகின்றேன்என்றும் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் அமைச்சர் தொண்டமான் தனது புத்தாண்டுச் செய்தியில் 'எனது முயற்சி வெற்றி பெறவும், சமாதானம் ஏற்படவும் பிரார்த்தியுங்கள்' எனக்குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா

கள் கூடஇருக்கின்றனர்.

பிரேமதாச அரசு அரச நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தியதன் விளைவாக வேலை இழந்தவர்களும், தாய்மார் சங்கமும், மற்றும் பல வர்த்தக சங்கங்களும் இணைந்து ஒரு பொது பாதயாத்திரையை கொழும்பில் இருந்து கதிர்காமம் வரை நடாத்த உள்ளனர்.

இந்த பாதயாத்திரையில் முக்கிய பங்கு வகிக்கும் எம்.பி மகிந்தாராஜபக்ச கொழும்பு பத்திரிகைக்கு கூறுகையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி மக்கள் உரிமை கூட்டமும் பாதயாத்திரையும் நடாத்தப்பட வேண்டும் என்றார்.

யாழ்.

நிலைபங்களை அமைத்துத் தமது நிலையைப் பலப்படுத்தியுள்ளதோடு, யாழ். நகருக்கு இட்டுச் செல்லும் வீதிகளிலெல்லாம் கண்ணி வெடிகளை விதைத்துள்ளனர் என்றும் ஐலண்ட் செய்தி கூறுகிறது.

1987 மே மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் கடல் மார்க்கமாக நடத்தப்பட்டதாக்குதல்கள் முக்கியமானவை என்றும் கடல் வழித் தாக்குதலில் எவ்வித மாற்றத்திற்கும் இடமில்லை என்று இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுவதாகவும்,

போர் ஒன்றுக்குத் தயார் செய்யும் வகையில்சீனாவிலும் செக்கோஸ்லாவேக்கியாவிலும் கொள்வனவு செய்யப்பட்ட கவச வாகனங்கள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனவா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது என்றும்,

புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்பு இராணுவத்துக்கு கணசமான அளவு இழப்புகளைஏற்படுத்த புலிகள் முயற்சிக்கிறார்கள். துரிதமாகச் செயற்படும் பிரிவுகளைப் புலிகள் முடுக்கி விட்டு மணலாற்றுப் பகுதியில் இராணுவ நிலைகள் மீது குறைந்தது இரண்டு முறைகளாவது தாக்குதலை நடத்தி பல இராணுவத்தினரைச் சாகடித்துள்ளனர்.

இவ்வாறு ஐலண்ட் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலணை அதிபர்கள் கூட்டம்

வேலணை கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை மூன்றாம் திகதி காலை 9-00 மணிக்கு யா வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் முக்கியமான விடயங்கள் தீர்மானிக்க படவேண்டி உள்ளது எனவும் இந்த அதிபர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும் என வேலணை உதவி கல்வி பணிப்பாளர் வேண்டிஉள்ளார்

## அல்பா தலைவர் சுட்டுக்கொலை

(டில்லி)

அசாம் மாநிலத்தின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த அல்பா எனப்படும் அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரான ஜோதி மகிந்தா நேற்று கௌகார்த்தி சமீபமாக உள்ள கிராமமொன்றில் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழீழ

மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

காலை 8 - 30 மணியளவில் கோப்பாய்காவல்நிலையத்தை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பாவரசன் (வைப்) திறந்து வைத்தார். தேசியக்கொடியை திரு.பாவரசனும்காவல்துறைக்கொடியை விடுதலைப்புலிகளின் கடற்படைத் தளபதி திரு.சூசையும் ஏற்றி வைத்தனர். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. கண்ணா, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. பரதன் ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

காலை 9.45 மணியளவில் சாவகச்சேரி காவல் நிலையத்தை விடுதலைப் புலிகளின் மகளிர் சிறப்புப் படைத்தளபதி செல்வி ஜனா திறந்து வைத்தார் தேசியக் கொடியை செல்வி ஜனாவும் காவல் துறைக் கொடியை தென்மராட்சித்தளபதி திரு. பரணியும் ஏற்றி வைத்தனர் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. நியூட்டன், தென்மராட்சி விசேட தளபதி திரு. குணா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

# பந்த் அமைதியாக நடத்த ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

பந்த் அமைதியான முறையில் நடத்திச் சட்டத்தையும் ஒழுங்கையும் பேண உதவும்படி செல்வி ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் நாட்டில் இன்று நடைபெறும் சர்வகட்சி பந்த் குறித்து செல்வி ஜெயலலிதா நேற்று மாலை சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பந்த்தின் போது தமிழகத்தில் சிறுபான்மையினராக வாழும் கன்னட மக்கள் மீது வன்முறைச்சம்பவங்கள் ஏவி விடப்பட்டால், கர்நாடகத்தில் வாழும் தமிழர்களை அது பெருமளவில்பாதிக்கும்என்றும் பந்த் போராட்டத்தின் மூலம் தமிழகத்தின் நோக்கத்தைக் கர்நாடக அரசுக்கும், மத்திய அரசுக்கும் தெரிவிக்குமாறு செல்வி ஜெயலலிதா அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கர்நாடக வன்செயல்கள் தொடர்பாகத் தேசிய ஒருமைப்பாட்டுச்சபை கர்நாடகத்தையும், தமிழ்நாட்டையும் ஒப்புநோக்கியது தவறு தமிழ்நாட்டில் முற்றிலும் அமைதி நிலவுகிறது என்று பிரதேச இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே. ராமமூர்த்தி சென்னையில் தெரிவித்தார். கர்நாடகத்தில் சட்டம், ஒழுங்கைநிலைநாட்டுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு கர்நாடக அரசை வற்புறுத்துமாறு மத்திய அரசை ராமமூர்த்தி கேட்டுள்ளார்.

காவிரிப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவைச் செயற்படுத்துமாறு கர்நாடக அரசை வற்புறுத்த வேண்டுமென்று தமிழ்நாடு ஜனதா கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் கோரியுள்ளார்.

மேலும் பந்த் காரணமாக தமிழ் நாட்டில் உள்நாட்டு, சர்வதேச விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சில ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. மற்றும் ரயில் சேவைகளிலும் விமானசேவைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

## திருமலையில் சுட்டுக்கொலை

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ராவடிச்சேனை என்னும் இடத்தில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழரொருவர் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டபின் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் கடந்த இருபத்தோராம் திகதியன்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா

ணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் காயமடைந்திருக்கிறார்.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் இடம்பெற்ற இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது எஸ். சுதர்சன் (வயது 21) என்ற இளைஞர் காயமடைந்திருக்கிறார்.

ஐக்கியத்திற்கு

குப்பிரச்சினைகளையும் இந்த நாட்டிலுள்ள சகல இனமக்களினதும் கருத்தொருமைப்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு உறுதி பூணுவோமாக என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை ஒட்டி இவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது.

புலிகளையும்

லைக்குள் வரும் நோக்கமும் இருக்கவில்லை என்றும் எனவே தம்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது சட்ட விரோதமானது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

எம்மையும், பொருள்களுடன் கப்பலையும் விடுவிக்க வேண்டும் எனவும் அம் மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 'வானதியின் கவிதைகள்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'வானதியின் கவிதைகள்' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா வரும் சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி செல்வி ஆர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் புத்தக வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயாவும்,

சிறப்புரைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர். திரு. யோகரத்தினம் யோகி, பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வுப் பிரிவு செல்வி மாலினி, எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், தமிழீழ கலை, பண்பாட்டுக் கழகம் திரு. புதுவை இரத்தினதுரை, கவிஞர் திரு. இ. முருகையன், திரு. கணேசன் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

## மாவீரர் துயிலும் மாதிரி இல்லம் திறப்பு

(குருநகர்)

கடற்புலிகளால் குருநகரில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் மாதிரி இல்லத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை 5-00 மணிக்கு நடைபெறும்.

அதனை ஒட்டி நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்கள், சனசமூக நிலையங்களுக்கான பரிசளிப்பு இன்று நடைபெறும்.

இந்த வைபவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (21)

## ஈ. பி. ஆர். எல். எவ். சங்கர் கொழும்பில்கடத்தப்பட்டார்

(கொழும்பு)

ஈ. பி. ஆர். எல். எவ் இன் முக்கிய உறுப்பினர் ஒருவர் கொழும்பில் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார். சங்கர் என்று கூறப்படும் இந்த உறுப்பினர் இலக்கத்தகடு அற்ற ஒரு வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டார்.

சங்கர் என்பவருக்கு என்ன நடந்தது என்று பாதுகாப்பதிகாரிகள் கண்டு பிடிக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தாராஜபக்ஸ கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வோதயத்தின்

## இனவாத செயல்களை கண்டித்து உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

சர்வோதயத்தின் இனவாத போக்கை கண்டித்து நேற்று அந்த நிறுவனத்தின் முற்றத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

சர்வோதயத்தின் கணக்கு விபரங்களை வெளிக்காட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த உண்ணாவிரதிகள்இக்கணக்கு தஸ்தாவேஜுகளை வெளியே எடுத்துச் செல்ல முற்பட்டால் கட்டுக்கு மீறுவோம் என்று எச்சரித்தனர். இதேவேளை கணக்கு விபரத்தை வெளியே காட்டுமாறு கேட்க இவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சர்வோதய மக்கள் தொடர்பு அலுவலர் கூறினார்'

உண்ணாவிரதிகள் பத்து அம்ச கோரிக்கையை வைத்து உண்ணாவிரதமிருந்தனர். முடிவில் யாழ். செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் காரியதரிசி, பொருளாளர் ஆகியோர் இவ் உண்ணா விரதத்தை ''அர்ச்சயா'' பானம் வழங்கி முடித்து வைத்தனர். அத்துடன் உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாகவும் உறுதி அளித்தனர் ஆனால் உண்ணாவிரதிகள் தாம் இரவிலும் பகலிலும் இவ் அலுவலகத்தைக் கண்காணிக்க போவதாக கூறினார்கள்(க,லோ

## மரண அறிவித்தல்

### செல்வி இராசம்மா

சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த செல்வி இராசம்மா (01-01-92) நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும், திருமதி செ. தம்பித்துரை (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்) காலஞ் சென்ற பரமநாதன் (பரந்தன்), பாலசிங்கம் (பாலன்), பாக்கியநாதன் (ராசு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் பொ.வே. தம்பித்துரை (மத்திய மருந்தகம், கைதடி), திருமதி விமலாதேவி, திருமதி சியாம்சுகுணா, திருமதி சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வி சுதர்ஷினி, செல்வி சுபாஷினி ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், பிரசன்னா, கவிதா, நிருபன், பிரதீபன், அர்ச்சனா, ஜீவிக்கா ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02-01-92) வியாழக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

[2064] டாக்டர் பொ. வே. தம்பித்துரை

வெற்றிநடைபோட்டு விண்ணுலகம் புகுந்திட்ட
எமது அன்புச் செல்வனின்

### 19ஆவது பிறந்த தினமும் 120-வது நாள் நினைவும்



வீரப் பிறப்பு 1973-1-2

வீரச் சாவு 1991-9-5

### வீரவேங்கை பாறூக்
### (தனபாலன் ஶ்ரீதரன்)

அனலாற்றில் நீந்திப் பாடினாய் - புலிக்குட்டி
ஆகிப் பெரும் போரில் ஆடினாய்
மணலாற்றில் மாவீரன் ஆகினாய் - இளங்குட்டி
மரணத்தை வென்று நீ வாழ்கிறாய்
பூமேனி சாவோடு போனதே - உந்தன்
புலி வீரம் வரலாறாய் ஆனதே
தமிழ்த்தாய் மானங் காத்திட்ட வேங்கையே பாறூக்
தமிழுள்ள வரையில் நீ இங்கு தூங்குவாய்!

உன்பிரிவால் துயறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
இயக்க நண்பர்கள்

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(2061)

## கலை நிகழ்ச்சி

விடுதலைப்புலிகள் மாணவ இயக்கத்தின் ஆதரவில்,
தேவர் அண்ணா
அமரசிங்கம்
பாஸ்கரன்
திருமதி கருணாநந்தசிவம்
உதயம்
ஆகியோரின் நடிப்பில்
பொன். கணேசமூர்த்தியின்

**"சந்தனக் காடு"**
(நாடகம்)

சாந்தன் குழுவினரின்
**"போர்க்கால ராகங்கள்"**
(இசை நிகழ்ச்சி)

காலம்: 02-01-92 இன்று
03-01-92 நாளை
இடம்: யாழ். பரியோவான் கல்லூரி
(சென். ஜோன்ஸ்)

அனுமதி சீட்டுக்கள் நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

[2065]

# ?

தை 5 முதல்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம், பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.